**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 415/2014 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 8<br>Defense<br>Court |
| Name | திரு. ஆதிமூலம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

*எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of March 2026.

நான் தற்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 02.11.2010 ஆம் தேதி உதவி ஆய்வாளர் வினோதினி என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்று சிகிச்சையிலிருந்த கீழகோடான்குளம் சாலமன் மகன் மாணிக்கம் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதன் தன்மைகேற்ப குற்ற எண். 97/2010 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) என்ற வழக்கை பதிவு செய்தார். அந்த புகார் வாக்குமூலம் **<u>அ.சா.ஆ.4</u>** ஆகும். முதல் தகவலறிக்கை **<u>அ.சா.ஆ.5</u>** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை அவரே எடுத்துகொண்டு அன்றைய தினம் 22.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் மாரிமுத்து,

ராஜ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.6** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும்.

சாட்சிகள் மாணிக்கம், கிறிஸ்டியன், செல்வம், ஏசுவடியான், வீரபெருமாள் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தார். வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் ஷியாம்சுந்தர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அவர் அளித்த காயச்சான்றிதழ் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட சீமகருவேலம் கம்பை 02.01.2010ம் தேதி 23.00 மணிக்கு சாட்சிகள் ராஜ்குமார், மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடமான கீழகோடான்குளத்திலிருந்து கைப்பற்றி அத்தாட்சி பிறப்பித்து படிவம் 91ன் படி முறைபடுத்தி நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார். அத்தாட்சி **அ.சா.ஆ.8** ஆகும். படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆகும். சீமகருவேலம் கம்பு **அ.சா.பொ.1** ஆகும்.

வழக்கின் 1 மற்றும் 2ம் எதிரிகளை கீழகோடான்குளம் பஸ்ஸ்டாப்பில் வைத்து 03.1.2010ம் தேதி 06.30 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்.

வழக்கில் சட்டபிரிவுகளை இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) லிருந்து இதச பிரிவுகள் 294(பி), 325, 506(1) ஆக பிரிவு சட்டமாறுதல் அறிக்கை மூலம் மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். சட்ட மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும்.

புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரிகள் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கின் புகார்தாரர் 1வது எதிரி தன்னை இடது கையில் அடித்தார் என புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் 1வது எதிரி தன்னை இடது கையில் எந்த பாகத்தில் அடித்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கில் மருத்துவரை தவிர அனைத்து சாட்சிகளும் 02.11.2010ம் தேதி விசாரணை செய்யப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக குறியீடு செய்யப்பட்ட இடத்தின் அருகில் எதிரியின் வீடு இருந்ததாக துலங்காது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்துவந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகார்வாக்குமூலத்தில் பொதுமுடுக்கு

சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் புகார்வாக்குமூலத்தில் எதிரிக்கும் தனக்கும் இடம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சிகளின் விசாரணை வாக்குமூலங்கள் வெவ்வேறு நபர்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரியை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்த காவல் அதிகாரி 02.11.2010ம் தேதி இரவு 21.30 மணிக்கு ஐகிரவுண்ட் மருத்துவமனையில் இருந்தார் என்று முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவயிடம் தனியாருக்கு சம்பந்தமான இடம் என்றால் தெரியாது. மாதிரிவரைபடத்தில் உரக் கிடங்கு போட்ட இடமும், சம்பவயிடமும் வெவ்வேறு இடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அனைத்து வழக்கு ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் 1வது எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கின் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்து வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.03.07 13:37:57 +0530